திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்: 03162/ஆ4/2021 நாள்: 20.01.2022

பொருள்: தேர்வுகள் – திருப்பத்தூர் மாவட்டம் – 2021–2022–ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் (+2) – தேர்வுக்கட்டணம் மற்றும் TML கட்டணம் செலுத்துவதற்கும் கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் – சார்பாக.

பார்வை: 1. சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 027018/எச்1/2021 நாள் 04.01.2022 மற்றும் 19.01.2022.

2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள்: 04.01.2022.

******

2021 – 2022 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் எழுதவுள்ள பள்ளி மாணவர்களது தேரவுக்கட்டணத் தொகை மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான (TML) கட்டண தொகையினை ஆன்லைன் வழியாக செலுத்த 05.01.2022 முதல் 20.01.2022 வரையிலான நாட்களுக்குள் செலுத்திடுமாறு அனைத்து வகை மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுக்கட்டணம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான (TML) கட்டணங்களை இணையதளம் வாயிலாக செலுத்துவதற்கு 31.01.2022 வரையிலான நாட்களில் கூடுதலாக கால அவகாசம் அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. மேற்காண் தேர்விற்கான தேர்வுக்கட்டணங்களை செலுத்தும் பணியினை 31.01.2022–க்குள் முடித்து கொள்ள அனைத்து வகை மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

ஒம்/– 20.01.2022

முதன்மைக் கல்வி அலுவலர்

திருப்பத்தூர்

**பெறுநர்**

1. அனைத்து வகை அரசு/நிதியுதவி/சுயநிதி/மெட்ரிக் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்கள், திருப்பத்தூர் மாவட்டம்.

2. மாவட்டக் கல்வி அலுவலர் திருப்பத்தூர்/வாணியம்பாடி அவர்களுக்கு தகவலுக்காகவும் தக்க தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.